RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 94 | ஏப்ரல்.11 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# மாதவரம் தொகுதி அதிமுக வேட்பாளர் ஊழல் குற்றச்சாட்டால் ஜெயலலிதாவால் தண்டிக்கப்பட்டவர்: உதயநிதி பிரச்சாரம்

சென்னை: ஏப்.11-

மாதவரம் தொகுதியில் ஏற்கெனவே இரு முறை தொடர்ச்சியாக வெற்றிபெற்று எம்எல் ஏவாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள எஸ்.சுதர்சனம் மூன்றாவது முறையாக திமுக சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். இவரை எதிர்த்து அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சரான வி.மூர்த்தி போட்டியிடுகிறார்.

இந்நிலையில் எஸ்.சுதர்சனத்தை ஆதரித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மாதவரம் பஜார் பகுதியில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது: மாதவரம் தொகுதியில் அதிமுக சார்பில் நிறுத்தப்பட்டுள்ள மூர்த்தி எப்படிப்பட்டவர் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆவின் பாலில் கலப்படம் செய்து ஊழல் செய்தவர். அதனால் அமைச்சர் பதவியில் இருந்தே நீக்கினார் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. திமுக வேட்பாளர் மாதவரம் சுதர்சனத்தைப் பற்றி உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

எளிமையானவர். தொகுதி மக்களை அரவணைத்து செல்பவர். கடந்த 10 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்.

கடந்த முறை 57 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெறச் செய்தீர்கள். இம்முறை ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அவரை 3வது முறையாக பேரவைக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.





## "களத்தில் தவெக, நாதக இருந்தாலும் இருமுனை போட்டிதான்" :அண்ணாமலை கருத்து

ஊட்டி: ஏப்.11-

"தமிழக வெற்றி கழகம் மற்றும் சீமான் களத்தில் இருந்தாலும், தேர்தல் என்று வந்துவிட்டால் அது இருமுனைப் போட்டியாகத்தான் இருக்கும். ஒன்று ஆளும் திமுக, மற்றொன்று அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி" என பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம், ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதி பாஜக வேட்பாளர் மு.போஜராஜனை ஆதரித்து பிரச்சாரம் செய்ய பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை இன்று காலை கோவையில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் ஊட்டி வந்தார். ஊட்டி தீட்டுக்கல் ஹெலிகாப்டர் தளத்தில் வந்து இறங்கினார். அங்கு பறக்கும் படையினர், ஹெலிகாப்டரை சோதித்தனர்.

அப்போது, செய்தியாளர்களிடம் அண்ணாமலை கூறியது: "ஊட்டி சட்டப்பேரவைத் தொகுதியில் இந்த முறை தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பாக, பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளராக போஜராஜன் களத்தில் நின்று கொண்டிருக்கிறார். கடந்த முறை சில ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி வாய்ப்பை இழந்தோம்.

அதன் பிறகு ஐந்து ஆண்டு காலம் மிக கடுமையாக உழைத்திருக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்கள், தொண்டர்கள் எல்லாம் முழு ஒத்துழைப்பை நல்கி, இந்த முறை நிச்சயமாக ஊட்டியில் போஜராஜனுக்கு வெற்றி வாய்ப்பு கிடைக்கும் என்று முழுமையாக நம்புகிறோம்.

மக்கள் தன்னெழுச்சியாக காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு முறை இங்கு வாய்ப்பு கொடுத்தனர், ஆனால், எந்தவிதமான அடிப்படை வேலையும் செய்யவில்லை. மறுபடியும் திரும்பத் திரும்ப அதே கட்சி வந்து எந்த வேலையும் செய்யாமல், இன்னைக்கு திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியில் கூட ஒரு பிளவோடு இருக்கிறது.

எனவே, இந்த முறை வெற்றி வாய்ப்பு எங்களுக்குத் தான். ஏன் என்றால் மக்களுடைய அன்பு எங்கள் பக்கம்தான் இருக்கிறது. போஜராஜன் மிகச் சிறந்த ஒரு சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் ஊட்டிக்கு வருகிறார். எங்களுடைய மூத்த தலைவர்களும் ஊட்டிக்கு வருகின்றனர். புதுச்சேரியில் 89% வாக்குப்பதிவு நடந்துள்ளது.

அசாமிலும் மிக அதிகப்படியான வாக்குப்பதிவு. காரணம் எஸ்ஐஆர் மூலமாக வாக்குகள் நீக்கப்பட்டிருப்பது இயற்கையாகவே வாக்கு சதவீதத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. புதுச்சேரியிலும், அசாமிலும் 'ப்ரோ இன்கும்பன்சி' அதாவது ஆளுகின்ற அரசு நமக்கு மீண்டும் வேண்டும். அசாமில் என்டிஏ பாரதிய ஜனதா கட்சி அரசு மீண்டும் வேண்டும். புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான என்டிஏ ஆட்சி மீண்டும் வேண்டும் என்பதில் மக்கள் உறுதியாக இருக்கிறார்.

இது தமிழகத்திலும் எதிரொலிக்கும். மே 4ஆம் தேதிக்கு பிறகு எடப்பாடி பழனிசாமி முதல்வராக பொறுப்பேற்கும் போது தமிழகம் முழுவதும் ஒரு எழுச்சியான சூழல் உருவாகும்.

தமிழக வெற்றி கழகம் மற்றும் சீமான் களத்தில் இருந்தாலும், தேர்தல் என்று வந்துவிட்டால் அது இருமுனைப் போட்டியாகத்தான் இருக்கும். ஒன்று ஆளும் திமுக, மற்றொன்று அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி.

எடப்பாடி பழனிசாமி கருத்தை முதல்வர் ஸ்டாலின் தவறான ஒரு சூழலில் பேசுகிறார். கனிமொழி எங்களை யாராவது எதிர்த்துப் பேசினால் 'மலர் வளையம்' வைப்போம் என்று கூறுகிறார், இது மிரட்டல் இல்லையா?

மேலும், நட்சத்திரப் பேச்சாளராக இருக்கும் அவர் இதுவரை திமுகவின் ஒரு கூட்டத்தில் கூட பங்கேற்கவில்லை. அந்த ஆடியோவில் அவர் முதல்வரின் திறன் பற்றியும், 2ஜி வழக்கு பற்றியும் பேசியுள்ளது தமிழக மக்கள் அனைவருக்கும் தெரியும். இது எங்களுடைய பிரச்சாரத்துக்கு இன்னும் வலுசேர்த்துள்ளது" என்று அவர் கூறினார்.

## காரைக்குடி பிரசாரத்துக்கு செல்லும் வழியில் திடீரென சைக்கிள் ஓட்டிய விஜய்

காரைக்குடி, ஏப்.11-

தவெக தலைவர் விஜய் இன்று காரைக்குடியில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். இதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் மதுரை வந்த விஜய், அங்கிருந்து தனது பிரசார வேனில் பயணித்தபடி ரோடு ஷோவாக வந்தார்.

மதுரையில் இருந்து காரைக்குடிக்கு 1.30 மணி நேரத்தில் வந்துவிடலாம் என்ற போதிலும், வழி நெடுக மக்கள் கூட்டம் அலைமோதியதால் விஜய் வந்து சேர தாமதமானது. 2.30 மணி வரை மட்டுமே காரைக்குடி கண்ணதாசன் நகர் பகுதியில் விஜய் பிரசாரத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்த நிலையில், தாமதமாக விஜய் பிரசாரம் நடைபெறும் இடத்திற்கு வந்தார்.

விஜய்யை காண ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வெயிலையும் பொருட்படுத்தாமல் காத்திருந்தனர். இதற்கிடையில், காரைக்குடி நகருக்குள் நுழைந்ததும் விஜய் திடீரென வேனில் இருந்து இறங்கி சைக்கிள் ஓட்டினார். தொண்டர்கள் கூட்டம் அலைமோதிய நிலையில் சைக்கிளில் தடுமாறிய விஜய், பின்னர் மீண்டும் பிரசார வேனுக்கே சென்று ரோடு ஷோவாக தனது பிரசாரத்தை தொடர்ந்து மேற்கொண்டார்.

## மெட்ரோ ரயிலில் ஸ்டாலின் பயணம்: திட்டம் கடந்து வந்த பாதையை நினைவுகூர்ந்து நெகிழ்ச்சி

சென்னை: ஏப்.11-

சென்னையின் நேற்று(வெள்ளிக்கிழமை) மெட்ரோ ரயிலில் பயணித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின். இது தொடர்பாக அவர் தனது சமூகவலைதளத்தில் பகிர்ந்த பதிவில், "மெட்ரோ விரிவாக்கப் பணிகள் எல்லாம் நிறைவுறும்போது, இந்தியாவிலேயே மெட்ரோ வழியாக அதிக தூரத்தை இணைக்கும் நகரங்களுள் ஒன்றாகச் சென்னை விளங்கும்," என்று பெருமிதம் தெரிவித்தார்.



முதல்வர் தனது சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

மக்களின் அன்பில் நனைந்தபடியும், மெட்ரோ இரயில் திட்டம் உருவாகப் பாடுபட்ட நாட்களின் நினைவுகளைச் சுமந்தபடியும் ஒரு பயணம்ஞ் துணை முதலமைச்சராக இருந்தபோது, ஜப்பான் நாட்டிற்குச் சென்று யிமிசிகிவின் நிதியுதவியைப் பெற்று வந்து, நான் முன்னின்று செய்த திட்டம்!

விம்கோ நகர் முதல் விமான நிலையம் வரையிலும், செண்ட்ரல் முதல் பரங்கிமலை வரையிலும் இயங்கிவரும் முதற்கட்டத் திட்டத்தில் இதுவரையில் கோடிக்கணக்கான பயணங்களை மக்கள் மேற்கொண்டுள்ளனர்.

அதிவேகமாக நடைபெற்றுவரும் மாதவரம் சிறுசேரி, கலங்கரை விளக்கம் பூந்தமல்லி, மாதவரம் சோழிங்கநல்லூர் இடையேயான இரண்டாம்கட்டத் திட்டப் பணிகளையும் விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு ஒப்படைப்போம்.

விமான நிலையம் கிளாம்பாக்கம், கோயம்பேடு பட்டாபிராம், பூந்தமல்லி சுங்குவார்சத்திரம், தாம்பரம் கிண்டி, கலங்கரை விளக்கம் உயர் நீதிமன்றம், சிறுசேரி கலைஞர் பன்னாட்டு அரங்கம் என மெட்ரோ விரிவாக்கப் பணிகளெல்லாம் நிறைவுறும்போது, இந்தியாவிலேயே மெட்ரோ வழியாக அதிக தூரத்தை இணைக்கும் நகரங்களுள் ஒன்றாகச் சென்னை விளங்கும்!

சென்னையை வளர்த்தெடுக்கும் நமது கனவு வெல்லட்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## காரைக்குடி பிரச்சாரத்தில் பேசாமல் புறப்பட்டார் விஜய்: தாமதமாக வந்ததால் அனுமதி மறுப்பு

காரைக்குடி: ஏப்.11-

காரைக்குடி தொகுதியில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை கடந்து, பிரச்சாரம் நடக்கும் இடத்துக்கு வந்ததால், தவெக தலைவர் விஜய் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் காரைக்குடியில் விஜய் பேசாமல் திரும்பிச் சென்றார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொகுதியில் இன்று விஜய் பிரச்சாரம் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக காவல் துறை அனுமதியும் அளித்திருந்தது. காரைக்குடியில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 4 வேட்பாளர்களுக்கும் ஆதரவாக விஜய் இன்று வாக்கு சேகரிப்பதாக இருந்தது. இதற்காக இன்று காலையில் சென்னையில் இருந்து தனி விமானம் மூலமாக மதுரை வந்த விஜய், அங்கிருந்து தனது வாகனம் மூலமாக காரைக்குடிக்கு புறப்பட்டார்.

மதுரையிலிருந்து வரும் வழியில் தவெகவினர் திரண்டதால், அவர்களுக்கு கையசைத்தபடி விஜய்யின் வாகனம் ஆமை வேகத்தில் பயணித்தது. இடையில் திடீரென பிரச்சார வாகனத்தில் இருந்து இறங்கிய விஜய், அவருக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் ஏறி பயணிக்க தொடங்கினார். இதனால் அவர் காரைக்குடிக்கு வருவதற்கு மிகவும் தாமதமானது.

மதுரையில் இருந்து காரைக்குடி வருவதற்க்கு உள்ள 90 கிலோ மீட்டர் தூரத்தை கடக்க விஜய்யின் வாகனம் 4 மணி நேரத்தும் மேல் எடுத்துக்கொண்டது. இதனால் விஜய், காரைக்குடிக்கு மதியம் 2.30 மணிக்கு மேல்தான் வந்தார். விஜய் காரைக்குடியில் பிரச்சாரம் செய்ய நண்பகல் 12 மணி முதல் மதியம் 2.30 மணி வரை அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

காவல் துறை அனுமதித்திருந்த நேரத்தை தாண்டி காரைக்குடிக்கு விஜய் வந்ததால், அவருக்கு பிரச்சாரம் மேற்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், பிரச்சாரம் நடக்கும் இடத்தில் கூடியிருந்த தொண்டர்களிடம் பேசாமலேயே விஜய் அங்கிருந்து புறப்பட்டார். மேலும், காரைக்குடியில் ரோடு ஷோ மேற்கொண்ட விஜய், தவெக வேட்பாளர் பிரபுவுக்கு வாக்களிக்கும்படி சைகையின் மூலம் தெரிவித்துவிட்டு புறப்பட்டார்.

## கூட்டணி கட்சிகளுடன் இளையான்குடியில் தமிழரசி ரவிக்குமார் தீவிர வாக்கு சேகரிப்பு: "வாக்குறுதிகளை நிறைவேற்றிய திருப்தியுடன் வருகிறேன்" என உரை

இளையான்குடி, ஏப்.11

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார், நேற்று இளையான்குடி வடக்கு ஒன்றியப் பகுதிகளில் தனது தோழமை கட்சி நிர்வாகிகளுடன் இணைந்து விறுவிறுப்பான தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் நேற்று காலை முதலே உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டும் பணி தீவிரமாக நடைபெற்றது. இதில் திமுகவோடு அதன் கூட்டணி மற்றும் தோழமை கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு ஒற்றுமையுடன் வாக்கு சேகரித்தனர்.

மக்களிடையே ஆற்றிய உரை:



பிரச்சாரத்தின் போது தமிழரசி ரவிக்குமார் பேசியதாவது:

"கடந்த ஐந்து ஆண்டுகளில் மானாமதுரை தொகுதி மக்களின் தேவைகளை அறிந்து, கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நான் முழுமையாக நிறைவேற்றியுள்ளேன். இந்த மனநிறைவோடும், நம்பிக்கையோடும் மீண்டும் உங்கள் ஆதரவைக் கோரி வந்துள்ளேன். இளையான்குடி பகுதியில் கல்வி, குடிநீர் மற்றும் சாலை வசதிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி, தமிழகத்தின் தொடர் வளர்ச்சிக்கு மிக அவசியம்."

பிரச்சாரப் பயண விவரம்:

இன்று காலை சார்புகுளம் பகுதியில் தொடங்கிய இந்தப் பிரச்சாரப் பயணம், பிராந்தமங்கலம், புதுக்குளம், ஆர்.கே.புரம், ஏமம், நாகமுகுந்தன்குடி, கொடிமங்கலம் எனத் தொடர்ந்தது. தோழமை கட்சித் தொண்டர்களின் முழக்கங்களோடு முடவேலி, தாயமங்கலம், காடனேரி மற்றும் ஏந்தல் பகுதிகளில் வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார் வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்தார்.

தொடர்ந்து கல்யாணி, சொக்கனேந்தல், கலைக்குளம், மணக்குடி, வில்லிசேரி மற்றும் மேலதுரையூர் வழியாகச் சென்ற வேட்பாளருக்குப் பெண்கள் ஆரத்தி எடுத்து சிறப்பான வரவேற்பு அளித்தனர். மதிய வேளையில் காரைக்குளம் பகுதியில் இன்றைய முதற்கட்டப் பிரச்சாரம் நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் முக்கிய நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் பணிக்குழுவினர் திரளாகப் பங்கேற்று தேர்தல் களத்தை விறுவிறுப்பாக்கினர்.



■ நீலகிரி மாவட்டம் உதகையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி உதகை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் போஜராஜ் ஆதரித்து, அண்ணாமலை தேர்தல் பிரச்சாரம் செய்தார். இதில் அஇஅதிமுக மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் மற்றும் தேதிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர் .





■ நீலகிரி மாவட்டம் உதகையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி உதகை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் போஜராஜ் ஆதரித்து, அண்ணாமலை தேர்தல் பிரச்சாரம் செய்தார். இதில் அஇஅதிமுக மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் மற்றும் தேதிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர் .



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோத்தகிரி கேபிஎஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் இளம் வாக்காளர்களிடையே வாக்களிப்பதின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக்கண்காட்சியினை கல்லூரி மாணவ, மாணவிகள் பார்வையிட்டு தெரிந்து கொண்டனர்.





## கொத்தூர் ஊராட்சியில்திமுக வேட்பாளரை ஆதரித்து தீவிர வாக்கு சேகரிப்பு!

ஜோலார்பேட்டை : ஏப்.11-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து அவருடைய மகள் டாக்டர் விஸ்வ லட்சுமி மற்றும் மகன் சக்தி ஆகியோர் கொத்தூர் ஊராட்சியில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். உடன் கொத்தூர் ஊராட்சி திமுக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்து வருகின்றனர்



■ பெண்கள் ஆதரவு அதிகரிப்பு: வேலம்பட்டியில் மதியழகன் தீவிர வாக்கு சேகரிப்புகிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேலம்பட்டியில், திமுக வேட்பாளர் மதியழகன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்து தீவிரமாக பிரசாரம் மேற்கொண்டார்.இந்தப் பிரசாரத்தின் போது, பொதுமக்களுடன் நேரடியாக சந்தித்து, தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விளக்கினார். குறிப்பாக பெண்களுக்கு வழங்கப்பட்ட நலத்திட்டங்கள் பெரிதும் பயன் அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.மேலும், “நாங்கள் செல்லும் இடமெல்லாம் பெண்களின் ஆதரவு அதிகரித்து வருகிறது. அரசு வழங்கிய திட்டங்களின் பயன்களை உணர்ந்த மகளிர் அதிக அளவில் கலந்து கொண்டு உற்சாகமாக ஆதரவு தெரிவிக்கிறார்கள்” என்று மதியழகன் தெரிவித்தார்.இந்த வாக்கு சேகரிப்பில் உள்ளூர் கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சியினரும் கலந்து கொண்டு உற்சாகமாக ஈடுபட்டனர்.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதி ஜெகதேவியில் வெள்ளிக்கிழமை தொழுகைக்கு பிறகு பள்ளிவாசல் முன்பு பர்கூர் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன், இஸ்லாமியர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு திருப்பூர் மாநகராட்சி, வளர்மதி பேருந்து நிறுத்தம் அருகில் பொதுமக்கள் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வண்ணக்கோலங்கள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது



## ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு

ஜோலார்பேட்டை : ஏப்.11-

திருப்பத்தூர் மாவட்டம்ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.கே.சதீஷ்குமார் தலைமையில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி, ஜோலார்பேட்டை புள்ளாநேரி, மூக்கனூர், திரியாலம், புதூர், அடியத்தூர், வேட்டப்பட்டு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரித்து சிறப்பு உரையாற்றி வருகின்றனர். உடன் ஜோலார்பேட்டை ஒன்றிய குழு பெருந்தலைவர் சத்தியா சதீஷ்குமார், ஒன்றிய குழு துணைத் தலைவர், ஸ்ரீதேவி காந்தி, கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு வாக்குகள் சேகரித்து வருகின்றனர்




■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி காவல் நிலைய கொலை குற்ற வழக்கில் தொடர்புடைய நடராஜன் மற்றும் ஆவுடையம்மாள் ஆகியோருக்கு சிவகங்கை மாவட்ட விரைவு மகிளா நீதிமன்றம் ஆயுள் தண்டனை மற்றும் 7000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தது.இந்த வழக்கில், நீதிமன்றத்தில் முறையான சாட்சிகள் மற்றும் ஆதாரங்களையும் சமர்ப்பித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள், அரசு தரப்பு வழக்கறிஞர் ஆகியோர்களை சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.சிவ பிரசாத், பாராட்டினார்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நடைபயணம்

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், தொடங்கி வைத்தார்

தேனி ஏப்.11-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில், 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் கல்லூரி மாணவர்களின் விழிப்புணர்வு நடைபயணப் பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், தொடங்கி வைத்து, நடைப்பயணப் பேரணியில் கலந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.





தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. வாக்காளர்கள் அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்வதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து இருசக்கர வாகனப் பேரணிகள், கையெழுத்து இயக்கம், சுவரொட்டி விளம்பரம், துண்டுப்பிரசுரம் வழங்குதல், ரங்கோலி, நடைபயணப் பேரணி, மனிதசங்கிலி, தெருநாடகம், விளம்பரப் பதாகைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் கல்லூரி மாணவர்களின் விழிப்புணர்வு நடைபயணப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் சுமார் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு வாக்களிப்பதன் அவசியம் குறித்து கோசங்களை எழுப்பியவாறும், பதாகைகளை ஏந்தியவாறும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணியானது, மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தொடங்கி, புதிய பேருந்து நிலையம், இரயில்வேகேட் வழியாக பங்களாமேடு பகுதி வரை சென்று நிறைவுபெற்றது.

முன்னதாக, வாக்களிப்பதன் அவசியம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய செல்ஃபிபாய்ண்ட் (Selfie Point)இல் செல்ஃபி எடுத்தும், விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கியும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, வாக்காளர்விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

மேலும், 100% வாக்களிப்போம், My Vote My Voice போன்ற தேர்தல் விழிப்புணர்வு வாசகங்களில் மனித வடிவத்தில் நின்று விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இப்பேரணியில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தமிழரசி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் .ஏ.எடிசன், மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவக்குமார், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்.குபேந்திரன், வட்டாட்சியர் சதீஸ்குமார் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை தொகுதியில் களம் காணும் முக்கிய வேட்பாளர்கள்: ஒரு பார்வை



மானாமதுரை ஏப்.11-

தமிழகத்தில் வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதியில் (14)போட்டியிட வாய்ப்புள்ள பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்கள் குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன. பிரதான அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் என இத்தொகுதியில் பலமுனைப் போட்டி நிலவுவது உறுதியாகியுள்ளது.

முக்கிய கட்சிகளின் வேட்பாளர் விவரம்: | வேட்பாளர் பெயர் | கட்சி / கூட்டணி |

| **தமிழரசி** | தி.மு.க., |

| **பொன். பாலகணபதி** | பா.ஜ., (அ.தி.மு.க., கூட்டணி) |

| **இளங்கோவன்** | த.வெ.க., |

| **சண்முகப்பிரியா** | நாம் தமிழர் கட்சி |

| **அருண் பாண்டியன்** | தமிழக வாழ்வுரிமைக் கட்சி |

| **ஆறுமுகம்** | இந்திய குடியரசு கட்சி |

| **திலக் ராஜ்** | அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் |

| **ராஜமாணிக்கம்** | புதிய தமிழகம் |

சுயேச்சைகள் மற்றும் போட்டி நிலவரம்:

இம்முறை மானாமதுரை தொகுதியில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மட்டுமின்றி, 6 சுயேச்சை வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர்.

தமிழகத்தின் முன்னணி கட்சிகளான தி.மு.க., மற்றும் பா.ஜ., (அ.தி.மு.க., கூட்டணி) ஆகியவற்றிற்கு இடையே நேரடிப் போட்டி நிலவினாலும், த.வெ.க., மற்றும் நாம் தமிழர் கட்சி போன்ற கட்சிகளின் வருகை இத்தொகுதியின் தேர்தல் முடிவுகளில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஏழைகள், பெண்கள், சிறுபான்மையினர் நலனுக்காக தி.மு.க.க்கு ஆதரவு கோரி மதியழகன் எம்.எல்.ஏ. தீவிர பிரசாரம்



கிருஷ்ணகிரி, ஏப்.11-

ஏழைகள், சிறுபான்மையினர் மற்றும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வரும் தி.மு.க. அரசுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று பர்கூர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ. வலியுறுத்தினார்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேலம்பட்டி, ஜெகதேவி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் அவர் தீவிரமாக வாக்கு சேகரிப்பு மேற்கொண்டார். அப்போது பொதுமக்களுடன் நேரடியாக கலந்துரையாடி, தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விளக்கினார். சிறப்பான ஆட்சி குறித்து விளக்கம்பிரசாரத்தின் போது மதியழகன் கூறியதாவது:“தி.மு.க. அரசின் திட்டங்களை பிற மாநிலங்களே தேர்தல் அறிக்கைகளில் எடுத்துக்காட்டாக பயன்படுத்துகின்றன. இதுவே தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சி நடைபெறுவதை நிரூபிக்கிறது. ஏழைகள் வாழ்வு உயர்வதற்கான திட்டங்களை தி.மு.க. தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. ஆனால் முந்தைய ஆட்சியில் அவ்வாறான திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை.

நான் எம்.எல்.ஏ.வாக இருந்த காலத்தில் மக்களின் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளேன். அடுத்த 8 மாதங்களில் படேதலாவ் ஏரியில் இருந்து கால்வாய் அமைத்து பர்கூர் சுற்றுவட்டார பகுதிகளுக்கு குடிநீர் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

நாங்கள் செய்த திட்டங்களுடன் மக்களை சந்தித்து வாக்கு கேட்கிறோம். எனவே மக்கள் சிந்தித்து தி.மு.க.க்கு ஆதரவு அளிக்க வேண்டும்” என்றார்.தெலுங்கில் பேசி வாக்கு சேகரிப்புமேலும், தெலுங்கு மொழி அதிகம் பேசப்படும் பகுதிகளில் மக்களுடன் தெலுங்கில் உரையாடி ஆதரவு திரட்டினார். பின்னர் பர்கூரில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தேர்தல் அலுவலக கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி கலந்து கொண்டு பேசினார். அவர், “பர்கூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை பகுதிகளுக்கு பல்வேறு திட்டங்களை பெற்றுத்தந்த மதியழகன் எம்.எல்.ஏ.வுக்கு ஆதரவு அளித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்.

மேலும், பெண்கள், சிறுபான்மையினர், மாணவர்கள் மற்றும் ஏழை மக்களுக்கு தேவையான நலத்திட்ட உதவிகளை தமிழக அரசு வழங்கி வருவதாகவும், உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறும் அவர் வலியுறுத்தினார். நேற்று வேலம்பட்டியில் ஒரு கடையில் போண்டா சுட்டு கொடுத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.



■ கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், வேப்பனப்பள்ளி மேற்கு ஒன்றியம் மார சந்திரம் ஊராட்சி நெடு சாலையில், வேப்பனப்பள்ளி தொகுதி அதிமுக வேட்பாளர் கே.பி. முனுசாமி இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரப்பில் ஈடுபட்டார்.






■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு, வாக்காளர்கள் தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில், JCI கிருஷ்ணகிரி, உமாராணி மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மற்றும் அரசு மகளிர் கலை கல்லூரி இணைந்து நடத்திய 2000க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் கலந்துகொண்ட 6 வினாடிகளில் "என் வாக்கு, என் உரிமை” என்ற வாசகம் ஒரே நேரத்தில் எழுதி கின்னஸ் உலக சாதனை புரியும் நிகழ்ச்சியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் துவக்கி வைத்தார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் முனைவர்.செள.கீதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# லெபனான் மீதான தாக்குதலை நிறுத்தும் வரை அமெரிக்கா உடன் அமைதிப் பேச்சு இல்லை

## ஈரான் உறுதி



தெஹ்ரான், ஏப்.11-

லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் நிறுத்தப்படும் வரை அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை கிடையாது என்று ஈரான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

அமெரிக்கா ஈரான் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நாளை (ஏப்.11) நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பாகிஸ்தான் அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை சுட்டிக்காட்டியுள்ள ஈரான், அந்த தாக்குதல் நிறுத்தப்பட்டால் மட்டுமே அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈரான் பங்கேற்கும் என்று அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஈரானின் தஸ்னிம் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், ‘அமைதிப் பேச்சுவார்த்தை நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது. எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள ஈரான் தயாராக உள்ளது.

ஈரான் மற்றும் எதிர்ப்பு இயக்கங்களுக்கு (ஹிஸ்புல்லா) சாதகமான முடிவுகள் இல்லாமல் முடிவடையும் ஒரு போர் நிறுத்தத்தின் விளைவுகளில் இருந்து அமெரிக்காவால் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது.

ஈரானும் எதிர்ப்பு சக்திகளும் விரும்பும் ஓர் உடன்பாட்டுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் ஒப்புக்கொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் காணும். இல்லையென்றால் அமெரிக்காவும் இஸ்ரேலும் மீண்டும் தாக்குதலுக்கு உள்ளாகும்’ என்று ஈரான் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, ஈரான் அதிபர் மசூத் பெசஷ்கியான் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “லெபனானுக்குள் இஸ்ரேல் மேற்கொண்ட ஊடுருவல், ஆரம்ப கால போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அப்பட்டமான மீறலாகும். இது, சாத்தியமான உடன்படிக்கைகளுக்கான அர்ப்பணிப்பின்மையின் அபாயகரமான அறிகுறியாகும்.

இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தால், பேச்சுவார்த்தைகள் அர்த்தமற்றதாகிவிடும். எங்கள் விரல்கள் தொடர்ந்து துப்பாக்கியின் விசையின் மீதே இருக்கும். ஈரான் தனது லெபனான் சகோதர சகோதரிகளை ஒருபோதும் கைவிடாது” என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, ஈரானும், அமெரிக்காவும் போர் நிறுத்தத்தை அறிவித்த பின், லெபனான் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் 100 ஏவுகணைகளை ஏவி 254 பேரை கொன்றது. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தி ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடியுள்ளது. இதனால் சண்டை நிறுத்தத்தில் குழப்பமான சூழல் ஏற்பட்டது கவனிக்கத்தக்கது.




# வாக்குப்பதிவு அதிகரித்திருப்பது தேர்தல் ஆணையத்துக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி: பாஜக

சென்னை, ஏப்.11-

நேற்று நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் வாக்குகள் அதிக அளவில் பதிவாகி இருப்பது இந்திய தேர்தல் ஆணையத்துக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை வெகு நேர்த்தியாக செயல்படுத்தியதன் காரணமாகவே இந்த சாதனை சாத்தியமானது என்றும் தமிழக பாஜக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாஜக மாநில தலைமைச் செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி வெளியிட்டுள்ள அறிக்கையில், “நேற்று நடைபெற்ற சட்டமன்ற தேர்தல்களில் புதுவையில் 91.2%, அசாமில் 85.6%, கேரளாவில் 78.2% வாக்குப்பதிவு நடைபெற்றிருப்பது இந்திய தேர்தல் ஆணையத்திற்கு கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய வெற்றி. சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தை (SIR) வெகு நேர்த்தியாக செயல்படுத்தியதன் காரணமாகவே இந்த சாதனை சாத்தியமானது. எதிர்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் தாண்டி இந்த வெற்றி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பல ஆண்டுகளாக வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்படாத இறந்து போனவர்கள், முகவரி மாறியவர்கள், இரண்டு இடங்களில் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றவர்கள் என பல்வேறு குழப்பங்களால் ஒவ்வொரு தொகுதியிலும், மாநிலங்களிலும் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததோடு , வாக்குப்பதிவு சதவிகிதம் குறைவாக காண்பிக்கப்பட்டு, மக்கள் வாக்களிக்க விரும்பவில்லை என்பது போன்ற ஒரு பிம்பத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் சிறப்பான செயல்பாடுகள் உண்மை நிலையை உணர்த்தியதோடு, மக்களிடம் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

இந்த சீர்திருத்தத்தை, உண்மையை உணர்ந்து ஏற்றுக் கொள்ளவேண்டிய கடமையும், பொறுப்பும் அனைத்து கட்சியினருக்கும் உள்ளது” என தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் ஏப்.14 வரை வெப்பநிலை 5 டிகிரி உயர வாய்ப்பு

சென்னை, ஏப்.11-

தமிழகத்தில் நாளை முதல் ஏப்.14ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஒடிசாவின் உட்பகுதி முதல் மன்னார் வளைகுடா வரை தெற்கு சத்தீஸ்கர், தெலங்கானா, ராயலசீமா, உள் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. மேலும் வட தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.11) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 12ம் தேதி தென் தமிழகம், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

13, 14 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், 15, 16 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும். இதர தமிழக பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

நாளை முதல் 14ம் தேதி வரை உள் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர், தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, விருதுநகர் மாவட்டம் பிளவக்கல் பெரியாறு அணையில் தலா 3 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

# மானாமதுரை சட்டமன்றத் தொகுதி: பா.ஜ.க. வேட்பாளர் பொன்.பாலகணபதி வாக்குறுதிகள் மற்றும் சாதனைகள்



மானாமதுரை ஏப்.11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதியின் பா.ஜ.க. வேட்பாளராகப் பொன்.வி.பாலகணபதி களம் இறங்கியுள்ளார். அவர் தனது தேர்தல் அறிக்கையில் தொகுதியின் வளர்ச்சி மற்றும் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காகப் பல்வேறு வாக்குறுதிகளையும், கடந்த காலச் சாதனைகளையும் முன்வைத்துள்ளார். முக்கியச் சாதனைகள்:

கோயில் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் பாதுகாப்பு: இரயில்வே நிர்வாகத்தால் அகற்றப்படவிருந்த வழிவிடு முருகன் கோயில், ஆஞ்சநேயர் கோயில், பள்ளிவாசல், விநாயகர் கோயில், சர்ச், ஐயப்பன் கோயில் மற்றும் முத்துமாரியம்மன் கோயில் ஆகியவற்றை, உரியப் பேச்சுவார்த்தைகள் மூலம் அகற்றவிடாமல் தடுத்து நிறுத்தியது.

ஓய்வூதியர்கள் சங்கக் கட்டிடம்: கடந்த 5 ஆண்டுகளாகத் தடையின்றி இருந்த இரயில்வே ஓய்வூதியர்கள் சங்கக் கட்டிடத்திற்கு மிளிசி பெற்றுத் தந்து, அதைக் கட்டித் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேர்தல் வாக்குறுதிகள்:

போக்குவரத்து மற்றும் கட்டமைப்பு: மானாமதுரை இரயில்வே கேட் பகுதியில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, பழைய பேருந்து நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும். மத்திய அரசின் 'அமிர்த் பாரத்' திட்டத்தின் கீழ் மானாமதுரை இரயில்வே நிலையம் தரம் உயர்த்தப்படும். கன்னார் தெரு கிருஷ்ணராஜபுரம் இடையே நிலுவையில் உள்ள தரைப்பாலப் பணிகள் விரைந்து முடிக்கப்படும். ஆனந்தவல்லி அம்மன் கோயில் முதல் சீயோன் நகர் வரை வைகையாற்று ஓரம் தார்ச்சாலை அமைக்கப்படும்.

வேலைவாய்ப்பு மற்றும் தொழில்: சிப்காட் வளாகத்தில் மூடப்பட்டுள்ள வீடியோகான் ஆலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுத்து, அதன் மூலம் இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இயங்காமல் உள்ள அரசுப் போக்குவரத்து கழகப் பணிமனை முழுமையாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

கல்வி மற்றும் விளையாட்டு: பயணியர் விடுதியை இடமாற்றம் செய்து, அரசு மகளிர் பள்ளியை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மாணவர்களின் நலன் கருதி மானாமதுரையிலேயே புதிய அரசு மேல்நிலைப்பள்ளி உருவாக்கப்படும்.

இளைஞர்களின் திறனை ஊக்குவிக்க நவீன விளையாட்டு மைதானம் அமைக்கப்படும். சமூக நலன் மற்றும் பிற திட்டங்கள்: மானாமதுரையின் தெற்குப் பகுதியில் புதிய மின்சார மயான வசதி ஏற்படுத்தப்படும். அனைத்து மதத்தினரும் பயன்படுத்தும் வகையில் வைகை கலை அரங்கம் அமைக்கப்படும். நகரத்தின் அனைத்து முக்கியத் தெரு முனைகளிலும் 'ஹைமாஸ்' விளக்குகள் பொருத்தப்படும்.

மதுரை, இராமேஸ்வரம் மற்றும் பரமக்குடி மார்க்கமாகச் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் மானாமதுரையில் நின்று செல்ல உறுதி செய்யப்படும்.தாமரைச் சின்ன த்திற்கு வாக்களித்து, மானாமதுரை தொகுதியை முன்மாதிரித் தொகுதியாக மாற்ற ஒத்துழைப்பு தருமாறு வேட்பாளர் பொன்.வி.பாலகணபதி கேட்டுக்கொண்டுள்ளார்.



## “பெண்களுக்கு ரூ.2000, இலவச ஃப்ரிட்ஜ்” - திருப்பரங்குன்றத்தில் ராஜன் செல்லப்பா அதிரடி வாக்குறுதி

### “அ.தி.மு.க. ஆட்சி வந்தவுடன் நிறுத்தப்பட்ட நலத்திட்டங்கள் மீண்டும்” – மக்களிடம் உறுதி

மதுரை,ஏப். 11-

திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், அ.தி.மு.க. வேட்பாளர் ராஜன் செல்லப்பா பல்வேறு பகுதிகளில் தீவிர தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வாக்காளர்களை சந்தித்து வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக, கல்லம்பல், பனையூர், சாமநத்தம், விராதனூர், நெடுங்குளம், நல்லூர் உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்ற பரப்புரையில் கலந்து கொண்டு அவர் வாக்காளர்களை நேரடியாக சந்தித்து ஆதரவு திரட்டினார்.


மக்களிடம் உரையாற்றிய ராஜன் செல்லப்பா, “எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், தி.மு.க. அரசு நிறுத்திய தாலிக்கு தங்கம், அம்மா மினி கிளினிக் போன்ற முக்கிய மக்கள் நலத்திட்டங்கள் உடனடியாக மீண்டும் செயல்படுத்தப்படும்” என்று வலியுறுத்தினார்.

மேலும், பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில், அனைத்து பெண்களுக்கும் எந்த வித பாகுபாடும் இல்லாமல் மாதந்தோறும் ரூ.2000 வழங்கப்படும் என்றும், குடும்ப நலனை கருத்தில் கொண்டு அனைத்து பெண்களுக்கும் இலவசமாக ஃப்ரிட்ஜ் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

அதோடு, தற்போதைய தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு குறைவாக உள்ளது என்றும், பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாகவும் குற்றம்சாட்டிய அவர், மாற்றத்தை கொண்டு வர அ.தி.மு.க.க்கு ஆதரவு தருமாறு வாக்காளர்களை கேட்டுக் கொண்டார்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் தன்னை 30,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த மக்களின் நம்பிக்கைக்கு நன்றி தெரிவித்த அவர், “இந்த முறை அதைவிட அதிக வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்து, வளர்ச்சிப் பாதையில் தொகுதியை கொண்டு செல்லுங்கள்” என்று உணர்ச்சி பூர்வமாக வேண்டுகோள் விடுத்தார்.

இந்த பரப்புரையில் அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாநிலச் செயலாளர் ராஜ்சத்யன், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் சந்திரன், சிலைமான் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சாகுல் ஹமீது, பா.ஜ.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு கட்சி பொறுப்பாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டு உற்சாகமாக ஆதரவு தெரிவித்தனர்.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியம் பையூர் உள்ளிட்ட கிராமங்களில் கிருஷ்ணகிரி தொகுதி அதிமுக வேட்பாளர் அசோக் குமார் இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். மேற்கு ஒன்றிய செயலாளர் பையூர் ரவி வரவேற்பில், இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே பி எம் சதீஷ்குமார், மாவட்ட விவசாய அணி மோகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு ஜெயக்குமார், ஒன்றிய அம்மா பேரவை கேசவன், முன்னாள் கவுன்சிலர் கணேசன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



■ கிருஷ்ணகிரி தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலகத்தில் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர். செல்லகுமார் தலைமையில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.உணவுப் பொருள் வழங்கள் துறை அமைச்சர் சக்கரபாணி, பர்கூர் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ,சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பார். இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு வாக்காளர்களிடம் அரசின் நல திட்டங்களை எடுத்துக் கூறி ,"கை" சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பது குறித்து ஆலோசனைகளை வழங்கினார்கள்.

## கொந்தகையில் கலைஞர் வேடமணிந்த நபருடன் வேட்பாளர் தமிழரசி ரவிக்குமாருக்கு உற்சாக வரவேற்பு

திருப்புவனம் ஏப்.11-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டம் கொந்தகையில், மானாமதுரை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான ஆ. தமிழரசி ரவிக்குமாருக்கு கிளைக் கழக திமுக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



மாவட்ட திமுக துணைச் செயலாளர் சேர்மன் சேங்கைமாறன் மற்றும் திருப்புவனம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வசந்தி சேங்கைமாறன் ஆகியோரது முன்னிலையில் இந்த வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. கொந்தகை கிளைக் கழகச் செயலாளர் சுரேஷ் மற்றும் குழந்தைச்சாமி ஆகியோரது தலைமையில் திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பெருந்திரளாகத் திரண்டு வேட்பாளரை வரவேற்றனர்.

நெகிழ்ச்சியை ஏற்படுத்திய கலைஞர் வேடம்இந்த வரவேற்பு நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக, தமிழக மேனாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களைப் போலவே வேடமணிந்த ஜோலார்பேட்டை சேர்ந்த முருகேசன் என்பவர் பங்கேற்றார். வேட்பாளர் தமிழரசி ரவிக்குமாருடன் இணைந்து கலைஞர் வேடமணிந்த நபருக்கும் மாலை அணிவித்தும், கைத்தறியாடைகள் போர்த்தியும் மரியாதை செய்யப்பட்டது. அங்கிருந்த பொதுமக்களும், பெண்களும் கலைஞர் வேடமணிந்த நபருடன் ஆர்வமுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

நிர்வாகிகள் பங்கேற்பு

இந்நிகழ்வில் கிளைக் கழக நிர்வாகிகள்: * சுரேஷ் (கிளைக் கழக செயலாளர்) * குழந்தைச்சாமி * சேது, பிச்சை, பிரேம் * சாமிக்கண்ணு, ரஞ்சித், ராமகிருஷ்ணன் * சதீஷ், ஜெகா, ஜெயவேல் * பூமிநாதன், கண்ணன், குலசேகர், செல்லமணி உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டு உற்சாகமான முறையில் தேர்தல் பரப்புரை வரவேற்பை சிறப்பித்தனர்.



■ மதுரை மாவட்டம் 190சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொட்டுலுபட்டி கிராமத்தில் பதட்டமான வாக்குச்சாவடியாக கண்டறியப்பட்டுள்ள காந்திஜி ஆரம்பப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் மேற்கொள்ளப்பட்டுள்ள உறுதிசெய்யப்பட்ட குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் மற்றும் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., ஆய்வு செய்து பார்வையிட்டார்.



■ திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் அதிமுக வேட்பாளர் V.சுதாகர் வாக்கு சேகரித்தார் இந்நிகழ்வில் ஊத்துக்கோட்டை பேரூர் திமுக நகர செயலாளர் மருமகன் மணிகண்டன் வேட்பாளருக்கு சால்வை அணிவித்து சிறப்பான வரவேற்பு கொடுத்து நகர செயலாளர் ஷேக்தாவூத் முன்னிலையில் தன்னை அதிமுகவில் இணைத்து கொண்டார்



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு சிறப்பு தேர்தல் பார்வையாளர் பிரதாப் சிங் தலைமையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே மற்றும் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் சுதா வர்மா சரிகா மோகன் தர்மேந்திர சிங் தினேஷ் ஸ்ரீ வத்சவா தேர்தல் செலவின பார்வையாளர்கள் மொசுகண்டி கங்காதர் சச்சின் குமார் சிங் நிலாய் பங்கர் சுனில் என் ரனோட் சத்ய நாராயணன் தக்கர் தேர்தல் காவல் பார்வையாளர் ராகுல் ஹெக்டே ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் அனைத்து அமலாக்க முகமைகளின் அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணி தொடர்பு அலுவலர்களுடன் தேர்தல் பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாநகர காவல் ஆனையாளர் .எஸ்.ராஜேந்திரன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஸ் அசோக் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



## மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 919 புள்ளிகள் உயர்ந்து 77,550 புள்ளிகளில் வர்த்தகம்

மும்பை, ஏப்.11-

வாரத்தின் கடைசி வர்த்தக நாளில் பங்குச் சந்தை குறியீட்டு எண்கள் 1.2% வரை உயர்ந்து முடிந்தன. மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 919 புள்ளிகள் அதிகரித்து 77,550 புள்ளிகளானது. சென்செக்ஸ் பட்டியலில் உள்ள 30 நிறுவனங்களில் 25 நிறுவனங்களின் பங்குகள் விலை உயர்ந்து வர்த்தமாகி வருகிறது. தேசியப் பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 275 புள்ளிகள் அதிகரித்து 24,051 புள்ளிகளில் வர்த்தகம் நிறைவடைந்தது

## குழந்தைகளுக்கு இலவச கல்வி வழங்கப்படும் என திருப்பூர் மாவட்ட ஆட்சியாளர் மனிஷ் நார்னரே தகவல்

திருப்பூர் ஏப்.11-

திருப்பூர் மாவட்டத்தில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009,நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளைச்சட்டப் பிரிவு 12 (1) (சி) ன் கீழ் சிறுபான்மையற்ற அனைத்து தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் சேர்க்கை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு அரசால் ஏற்கனவே வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு 201314 ம் கல்வியாண்டு முதல் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த குழந்தைகள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.சட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் வகையிலும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதிக அளவில் பயன்பெறும் வகையிலும், வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யும் பொருட்டும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள



வழிகாட்டுதல்களுடன் கீழ் குறிப்பிடப்பட்டு வழிகாட்டுதல்களும் கூடுதலாக அரசால் வழங்கப்படுகிறது.

எதிர்வரும் 20262027 ஆம் கல்வியாண்டிற்கு திருப்பூர் மாவட்டத்திலுள்ள சிறுபான்மையற்ற அனைத்து தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை (LKG/ I Std) வகுப்பில் 25% ஒதுக்கீட்டின் கீழ் மாணவர் சேர்க்கைக்கு இணைய வழியில் 20.04.2026 தேதி முதல் 18.05.2026 தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

எல்.கே.ஜி வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் குழந்தைகள் 01.08.2022 முதல் 31.07.2023 க்குள் பிறந்திருக்க வேண்டும்.

ஒன்றாம் வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் குழந்தைகள் 01.08.2020 முதல் 31.07.2021 க்குள் பிறந்திருக்க வேண்டுமஇதற்கான வசதி rte.tnschools.gov.in என்ற இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெற்றோர்கள் அவரவர் இருக்கும் இடத்தில் இருந்தே இதற்கான விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யலாம். விண்ணப்பம் வெற்றிகரமாகப் பதிவேற்றம் செய்யப்பட்ட விபரம், பதிவு செய்யப்பட்ட பெற்றோரின் கைபேசி எண்ணிற்குக் குறுஞ் செய்தியாக அளிக்கப்படும்.

முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள்)/ மாவட்டக் கல்வி அலுவலர் / வட்டாரக் கல்வி அலுவலர் / ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வட்டார வள மையம் ஆகிய அலுவலகங்களில் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை எவ்விதக் கட்டணமும் இல்லாமல் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யலாம்.

மாணாக்கரின் புகைப்படம்/மாணாக்கர் / பெற்றோரின் ஆதார் அட்டை நகல்/இருப்பிடச் சான்று/வருமானச் சான்று/சாதிச் சான்று/ முன்னுரிமை ஏதேனும் இருப்பின் அதற்கான சான்று ஆகியவற்றினை பதிவேற்றம் செய்ய வேண்டும். இந்த மாவட்டத்திலுள்ள அரசு இசேவை மையங்களைப் பதிவேற்றம் செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிட அதிகமாக விண்ணப்பங்கள் பெறப்படின் குலுக்கல் முறையில் 22.05.2026 அன்று அந்தந்த பள்ளிகளில் சேர்க்கைக்கான மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். பெற்றோர்கள் சேர்க்க விரும்பும் பள்ளிக்குச் சென்று மேற்படி குலுக்களில் கலந்து கொள்ளலாம்.

வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, ஆதரவற்றவர் எச்.ஐ.வி பாதிக்கப்பட்டவர் / மூன்றாம் பாலினத்தவர் / துப்புறவு தொழிலாளியின் குழந்தை / மாற்றுத் திறனாளிகள் போன்றோரிடமிருந்து பெறப்படும் தகுதியான விண்ணப்பங்களுக்கு குலுக்கல் நடத்துவதற்கு முன்னரே சேர்க்கை வழங்கப்படும்.22.05.2026 அன்று குலுக்கல் முடிந்த பிறகு, அன்றைய தினமே பள்ளிக்கு தகுதியுள்ள ஒரு பிரிவுக்கு 5 மாணவர்கள் என்ற வீதத்தில் காத்திருப்பு பட்டியலுக்கான மாணாக்கர்கள் வரிசை எண்ணிட்டு குலுக்கலில் தேர்தெடுக்கப்பட்டு ,காத்திருப்பு பட்டியலில் உள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை படி சேர்க்கை வழங்கப்படும். மேற்காணும் வழிகாட்டுதலின்படி சமுதாயத்தில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் சேரும் வாய்ப்பினைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161